**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவள்ளூர் மாவட்டம் – சோழவரம் ஊராட்சி ஒன்றியம் – பூதூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் – 25.02.2021 முதல் 30.06.2021 முடிய வெளிநாடு (அமெரிக்கா) செல்வதற்கு முன் அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–4) துறை**

**அரசாணை (நிர்லாயம்) எண். 51**

**நாள் 19.02.2021.**
சார்வரி, மாசி – 7
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.56742/ 2020/பரா1–2, நாள் 12.01.2021.
2. திரு. பி.சீனிவாஸ், பூதூர் ஊராட்சி மன்றத் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் கடித நாள் 15.02.2021.

------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூதூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் என்பவர் 01.03.2021 முதல் 30.06.2021 முடிய 122 நாட்களுக்கு தனது மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வர அரசின் அனுமதி கோரிய கருத்துருவினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார் எனவும், மேற்காணும் வெளிநாடு பயணக் காலத்தில் கிராம ஊராட்சி நிர்வாகத்தினை கவனித்துக்கொள்ளும் பொறுப்பினை துணைத் தலைவருக்கு வழங்கி இயற்றப்பட்டுள்ள பூதூர் கிராம ஊராட்சி மன்ற (தீர்மான எண்.44, நாள் 11.11.2020) தீர்மானத்தின் அடிப்படையிலும், திருவள்ளூர் மாவட்டம், திரு.பி.சீனிவாஸ் என்பவர் 01.03.2021 முதல் 30.06.2021 முடிய 122 நாட்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வருவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 82–A-ன்படி அரசின் அனுமதி வழங்குமாறும், இத்துடன் கடவுச் சீட்டு நகல் மற்றும் ஊராட்சி மன்றத் தீர்மான நகல் இணைத்தனுப்பப்பட்டுள்ளது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 82–Aன்படி சிற்றூராட்சியின் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றமொன்றின் அல்லது மாவட்ட ஊராட்சியொன்றின் தலைமையர், துணைத் தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை வகித்து வருகின்ற நபர் எவரும் அரசின் எழுத்து வடிவிலான அனுமதியுடனல்லாமல், அவ்வாறான தமது அலுவலகத் தகுதியில் அயல்நாடு எதற்கும் பயணம் எதனையும் மேற்கொள்ளுதல் கூடாது.

...2

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை ஏற்று முன் அனுமதி வழங்கலாம் என முடிவு செய்திருந்த நிலையில், தனியர் தனக்கு பயணம் மேற்கொள்ள உத்தேச பயணகாலத்திற்கு முன்புதான் 25.02.2021ல் பயணச்சீட்டு கிடைக்கப் பெற்றதாகவும், ஆகையால் 25.02.2021-லிருந்து முன்அனுமதி வழங்குமாறு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. எனவே, திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவின் மீதான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரை மற்றும் தனியரின் வேண்டுகோளினை கருத்தில் கொண்டும் உரிய விதிகளின் கீழ் ஆய்வு செய்த பின்பு, திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் 25.02.2021 முதல் 30.06.2021 முடிய வெளிநாடு (அமெரிக்கா) செல்வதற்கு முன் அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
திரு.பி.சீனிவாஸ்,
சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்.
**வழி:-** ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்
ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiagarajan
பிரிவு அலுவலர்.
19.2.2021